2019 ஜூலை 18]

கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

2. தகவல் கோரல்

(அ) மாணவர் சேர்க்கை குறைவாக உள்ள பள்ளிகள் மூடப்பட்டு, அங்கே நூலகங்கள் இயங்குவதாக வந்துள்ள செய்தி மற்றும் அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின்கீழ் இயங்கும் நூலகங்களை மீண்டும் செயல்பாட்டிற்குக் கொண்டு வருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர்கள் நிறைய பேர் இன்றைக்கு zero hour–லே பேச வேண்டுமென்று வாய்ப்புக் கேட்டிருக்கிறார்கள். நான் முடிந்தவரை வாய்ப்புத் தருகிறேன். ஆனால், பேசுகிற உறுப்பினர்கள் சுருக்கமாக ஒரு நிமிடம் அல்லது ஒன்றரை நிமிடங்களில் முடித்துக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன். அப்போதுதான் அமைச்சர்கள் அதற்குத் தக்கபடி சுருக்கமாக பதில் சொல்வார்கள். நிறையபேர் வாய்ப்பு கேட்பதனால் நீங்கள் சுருக்கமாகக் கேட்க வேண்டும். நீங்கள் நிறைய நேரம் எடுத்துக்கொண்டீர்களென்றால் நான் பேசுகிறவர்களைக் குறைக்க வேண்டியிருக்கும். எனவே, அனைவரும் இதற்கு ஒத்துழைக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள், நேற்று ஒரு பேட்டியிலே சொல்கிறபோது, தமிழகத்திலே மாணவர் சேர்க்கை எண்ணிக்கை குறைவாக இருக்கக்கூடிய 1,248 பள்ளிகள் மூடப்பட்டு அங்கே நூலகங்கள் இயங்கும் என்று தெரிவித்துள்ளதாக ஒரு செய்தி வந்திருக்கிறது. புதிய நூலகங்கள் வருவதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், நடைமுறையிலே

இயங்கிக் கொண்டிருக்கிற பள்ளிகளை வேறு பள்ளிகளோடு இணைத்துவிட்டு அங்கே நூலகங்கள் அமைப்பது தமிழகப் பள்ளி மாணவர்களுடைய நலனுக்கு எதிராக அமையும். அவர்களைப் பெரிதும் பாதிக்கும். எனவே, அதை ஏற்றுக்கொள்ள இயலாத நிலையில் நாங்கள் இருக்கிறோம். ஏற்கெனவே நம்முடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்தபோது, அவருடைய சீரிய முயற்சியிலே ஏறத்தாழ 12,000-க்கும் மேற்பட்ட ஊராட்சிகளிலே அமைக்கப்பட்ட நூலகங்கள் இப்போது செயல்பாட்டில் இல்லாமல் இருக்கின்றன. எனவே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் இப்போது உத்தேசித்திருக்கக்கூடிய இந்தத் திட்டத்தைக் கைவிட்டு, அந்தப் பள்ளிகள் அங்கேயே தொடர்ந்து இயங்குவதற்கான நடவடிக்கையை மேற்கொள்வாரா? மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களோடு கலந்துபேசி, ஏற்கெனவே அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திலே இயங்கிக் கொண்டிருந்த, இப்போது செயல்பாட்டிலே இல்லாமல் இருக்கக்கூடிய அந்த 12,000-க்கும் மேற்பட்டிருக்கக்கூடிய நூலகங்களைச் செயல்பாட்டுக்குக் கொண்டு வருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு பள்ளிக் கல்வி, இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 11-20

மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபோது, 1,248 பள்ளிகள் என்று குறிப்பிட்டார்கள். எங்களைப் பொறுத்தவரையிலும், 45 பள்ளிகளில் மட்டும்தான் ஒரு மாணவர் கூட இல்லை. அப்படிப்பட்ட பள்ளிகளைத்தான் நாங்கள் தேர்வு செய்திருக்கிறோம். பள்ளிகளில் ஆண்டுதோறும், 6 மாதத்திற்கு ஒரு முறை மாணவர் சேர்க்கை நடக்கிறது. அது உங்களுக்குத் தெரியும். சேர்க்கை விகிதங்கள் உயருகின்றபோது அந்தப் பள்ளி தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கும். அதுவரையில் பள்ளியை மூடுகின்ற நிலை இந்த அரசினுடைய கொள்கையிலே இல்லை. அந்தக் கவலை உங்களுக்குத் தேவையில்லை. இருந்தாலும், எதிர்க்கட்சியிலே அமர்ந்து கொண்டிருக்கின்ற உங்களைப் போன்றவர்களுடைய கருத்துகளை

2019 ஜூலை 18] [திரு. கே.ஏ. செங்கோட்டையன்]

நான் கேட்க விரும்புகின்றேன். ஏனென்று சொன்னால், ஒரு மாணவர்கூட இல்லாத இடத்தில், 2 ஆசிரியர்கள் அங்கே சென்று என்ன பணிகளை ஆற்ற முடியும் என்பதை நீங்கள்தான் சொல்ல வேண்டும். அதை உங்களுடைய முடிவிற்கே விட்டுவிடுகிறேன். இருந்தபோதிலும், ஒரு மாணவர்கூட இல்லாத பள்ளிகளில் 100 புத்தகங்களை வைத்து அதை நூலகமாக, தற்காலிகமாகத்தான் நாங்கள் கொண்டுவருகிறோமேயொழிய வேறு ஒன்றும் இல்லை. மாணவர்களின் சேர்க்கை குறைவாக உள்ள இடங்களில்தான் நாங்கள் இதைச் செய்து வருகிறோம். மாணவர்களின் சேர்க்கையை அதிகரிக்க அரசு நடவடிக்கை மேற்கொள்ள இருக்கிறது. அந்த நூலகத்தில் பணியாற்றுவதற்கு தற்காலிக நூலகர்கள் எங்களிடத்திலே இருக்கிறார்கள். அவர்களைப் பயன்படுத்திக்கொண்டு, அந்த 45 பள்ளிகளையும் எப்போதும்போல் நடைபெற வைக்க அரசு பரிசீலித்துக் கொண்டிருக்கிறது என்றுதான் நான் எடுத்துச் சொன்னேன். ஆகவே, மாணவர் சேர்க்கை எண்ணிக்கை குறைவாக இருக்கின்ற இடங்களில் ஆசிரியப் பெருமக்கள் ஆண்டுக்கு இரு முறை மாணவர்களின் சேர்க்கைக்காக அங்கே சுற்றுப்புறக் கிராமங்களில் இருக்கின்ற மாணவர்களை அழைத்து வருவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்கள். ஆக, எந்தப் பள்ளியையும் மூடுகின்ற நோக்கம் இந்த அரசுக்கு இல்லை. 45 பள்ளிகள் மட்டும்தான் ஒரு மாணவர்கூட இல்லாத நிலையிலிருக்கிறது. ஒரு பள்ளிக்கு இரண்டு ஆசிரியர்கள்வீதம் அங்கே பணியாற்றி வருகிறார்கள். அந்த ஆசிரியர்கள் அங்கே சென்று, என்ன பணிகளை ஆற்ற முடியும் என்ற நோக்கத்தில்தான், இந்த ஆசிரியப் பெருமக்களை தற்காலிகமாக அருகில் ஒரு கிலோ மீட்டர், ஒன்றரை கிலோ மீட்டர் தூரத்தில் இருக்கின்ற 2 ஆசிரியர்கள் உள்ள பள்ளிகளில் பணியமர்த்தி, 2 ஆசிரியர்களுக்கு பதிலாக 4 ஆசிரியர்களாகப் போடுகின்றபோது, அங்கே கல்வி வளர்ச்சி இன்னும் சிறப்பான முறையிலே இருக்கும் என்ற நோக்கத்தோடு அந்தப் பணிகளை மேற்கொள்ளலாமா என்பதைப் பற்றி நாங்கள் ஆய்ந்து கொண்டிருக்கிறோம் என்பதை மட்டும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, அண்ணாவின் புனித பெயரால் அனைத்து ஊராட்சி மன்றங்களிலும் நூலகங்கள் முதலில் இயங்கிக் கொண்டிருந்தன. அவை தற்போது செயல்படாமல் இருப்பதாக உறுப்பினர் சொன்னார். நம்முடைய உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடத்திலே அதுபற்றிக் கேட்கின்றபோது, அனைத்தும்

இயங்கிக் கொண்டிருக்கின்றன. அந்த நூலகங்கள் செயல்பட என்ன தேவை என்பதை எடுத்துச் சொல்லியிருக்கிறார். எங்கே குறைபாடுகள் இருக்கின்றன என்பதைச் சுட்டிக்காட்டி அதை நிவர்த்தி செய்யவேண்டுமென்று என்னிடத்திலே குறிப்பிட்டார்கள். எனவே, அந்தக் கவலை உங்களுக்குத் தேவையில்லை. அது நிறைவேற்றப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) சென்னை புறநகர்ப் பகுதி குடியிருப்புகளின் கழிவுநீரை அடையாறு ஆற்றோரப் பகுதிகளில் கொண்டு சேர்த்தலைத் தடுத்தல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. தா.மோ. அன்பரசன் அவர்கள்.*

திரு. தா.மோ. அன்பரசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை புறநகர் பகுதிகளிலுள்ள குடியிருப்புகளிலிருந்து எடுக்கப்படுகின்ற கழிவுநீர், லாரிகள்மூலம் பெருங்குடியிலுள்ள கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட வேண்டும். ஆனால், சென்னை புறநகர் பகுதிக்குட்பட்ட தாம்பரம், பம்மல், அனகாபுத்தூர், குன்றத்தூர் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள குடியிருப்புகளிலிருந்து எடுக்கப்படுகின்ற அந்தக் கழிவுநீரை, பெருங்குடி கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்படாமல், நூற்றுக்கணக்கான லாரிகளிலே கொண்டு வந்து அடையாறு பகுதியிலுள்ள கொளப்பாக்கம், கெருகம்பாக்கம், தரப்பாக்கம், இரண்டாம் கட்டளை, கவுல்பஜார், பொழிச்சலூர், திருநீர்மலை ஆகிய ஆற்றோரப் பகுதிகளிலே ஊற்றுகிறார்கள். மேலும், பம்மல், நாகல்கேணி போன்ற பகுதிகளிலுள்ள 200—க்கும் மேற்பட்ட தொழிற்சாலைகளிலிருக்கின்ற கழிவுநீரை சுத்திகரிப்பு செய்யாமல். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் சுருக்கமாக சொல்லி, உரையை முடியுங்கள்.*

திரு. தா.மோ. அன்பரசன்: *முடிந்துவிட்டது. மணப்பாக்கம் பகுதியிலே ஒரு* check dam *கட்டியிருக்கிறோம். கழிவுநீரை சுத்திகரிப்பு செய்யாமல், அந்த ஆற்றுப் பகுதிகளிலே விடுவதால் கிட்டத்தட்ட மொத்த கழிவுநீரும் அங்கே தேங்கி, 2, 3 கிலோ மீட்டர் தூரத்திற்கு துர்நாற்றம் வீசுவதோடு, குடிநீர் ஆதாரம் கெட்டுப்போய் இன்று பாழ்பட்டுப் போயிருக்கின்றது. அந்தக் கழிவுநீர் ஆற்றுப் பகுதிகளிலே விடப்படாமல் தடுத்து நிறுத்த*